# புதிய அறிவியல்

## நவீன இந்தியாவை நோக்கி.........

### இன்றைய விழா துளிகள்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகங்கள் கருத்தரங்கம்
- வெகுஜன தொடர்பு குறித்த வட்டமேசை அமர்வு
- அறிவியல் மற்றும் தொழில்துறை கண்காட்சி
- அறிவியல் கிராமம்
- புதிய கண்டுபிடிப்பாளர்களின் கலந்துரையாடல்
- புகைப்பட கண்காட்சி
- இளம் மாணக்கருக்கான வழிநடத்தும் பட்டறை

### ஐ.ஐ.எஸ்.எஃப் -2017. தொடர்ச்சி.

- கின்னஸ் உலக சாதனை
- துவக்க மாநாடு
- தேசிய அறிவியல் ஆசிரியர்களின் மாநாடு (வடகிழக்கு மாநிலங்களுக்கான)
- அரசின் சீரிய திட்டங்களை ஆக்கபூர்வ இளைஞர்களுக்கு கொண்டு செல்லுதல்
- அறிவியல் தகவல் மன்றம்
- தொழில் - கல்வித்துறை ஒருங்கிணைப்பு சந்திப்பு



*அறிவியலுக்கு பயம் தெரியாது. வித்தியாசமாக சிந்திக்க உங்களுக்கு துணிவிருந்தால், அறியப்படாத விஷயங்களுக்கு சவால் விடும் ஆற்றலும் உங்களுக்கு இருக்கிறது.*

**டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம்**

### அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகங்கள் கருத்தரங்கத்தின் சில துளிகள்...

- அறிவு மற்றும் பொருளாதார மேம்பாட்டு சிறப்பு திட்டங்கள்
- அறிவியல் முன்னேற்றத்திற்கான சர்வதேச கூட்டமைப்பு
- ஆய்வகத்திலிருந்து சமூகத்திற்கான அறிவியல்







### 24 நாடுகளைச் சார்ந்த மாணவர்களின் கலந்துரையாடல்







## அமைச்சர்கள் உரையின் சிறப்பம்சங்கள்

கூட்டத்திற்கு வருகை புரிந்த மான்புமிகு ஆப்கானிஸ்தான் மற்றும் வங்கதேச அமைச்சர்களை புவி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மாண்புமிகு டாக்டர்.ஹர்ஷவர்த்தன் வரவேற்றார். 44 நாடுகளுடனான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்புகளை விவரித்து, அவை மேலும் தொடர அமைச்சர் வலியுறுத்தினார்.

- 2018ம் ஆண்டிற்கான இந்தியாவின் அறிவியல் மற்றும் ஆரயாச்சி சிறப்பு திட்டங்களை அமைச்சர் அறிவித்தார்.
- முதுநிலை பேராசிரியர்கள் மற்றும் அறிவியலாளர்களுக்கான ஆராய்ச்சி உதவித்தொகை ஏற்படுத்துதல்
- எந்த ஒரு இந்திய சோதனைக்கூடத்திலும் 6மாத காலம் ஆய்வு மேற்கொள்ள ஆரயாச்சி மாணவர்களுக்கு அனுமதி
- அறிவியல் பட்டதாரிகளுக்கு பயண வாய்ப்புகள் 6மாத கால
- அண்டை தேச 30 ஆராய்ச்சி மாணவர்களுக்கு இந்தியாவில் ஆய்வு மேற்கொள்ள நான்கு ஆண்டுகால அனுமதி
- அண்டை தேசங்களுடன் கூட்டு ஆராய்ச்சியை மேம்படுத்துதல்

மாண்புமிகு மத்திய அறிவியல், தொழில்நுட்பத்துறை மற்றும் புவி அறிவியல் இணை அமைச்சர் ஒய்.எஸ் சௌத்ரி அவர்களின் உரையில்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கூட்டு மேம்பாட்டுத்திட்டங்களின் அவசியம்
- இளைஞர்களுக்குகான பிரத்யேக மற்றும் தொழிற்கல்வி கலந்துரையாடல்களின் தேவைகளை எடுத்துரைத்தார்.
- புதிய தொழில் துவங்குவோர்களின் எண்ணிக்கை உலக அளவில் இந்தியா 3ம் இடத்தில் இருப்பதாக தெரியப்படுத்தினார்.
- இந்த பிராந்தியத்தில் கூட்டாக அறிவியல் மேம்பாடு குறித்த தொழில்நுட்ப பகிர்வில் இந்தியா மகிழ்ச்சி கொள்வதாக தெரிவித்தார்.

SCIENCE FOR NEW INDIA
INDIA INTERNATIONAL SCIENCE FESTIVAL 2017

இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா 2017

Contact us at: 91 44 66783552/ 7720/ 7065

PARLIAMENT OF INDIA

# அறிவியல் கிராமம்

ஓர் அரிய வாய்ப்பு மாணவர்களுக்கு.....



## நம் அறிவியல் கிராமத்தின் சிறப்பம்சங்கள்...

கிராம மக்களின் சமுதாய தேவைக்கான அறிவியல் தீர்வை அவர்களுக்கு விளக்கவே இந்த அறிவியல் கிராம நிகழ்ச்சியை பாரத பிரதமரின் கிராமிய மேம்பாட்டுக் கொள்கை வழிப்படி நடத்தப்படுகிறது.

மாண்புமிகு 130 நாடளுமன்ற உறுப்பினர்களால் தத்தெடுக்கப்பட்ட 22 மாநிலங்களைச் சேர்ந்த சிறந்த மாணவர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்களால் நிரம்பியதே இந்த அறிவியல் கிராமம் ஆகும்.

கேள்விகள் கேட்டு அறிந்து கொள்வது மாணவர்களின் சிறந்த குணங்களின் ஒன்றாகும் அந்த சிறப்பம்சத்தை வளர்ப்போம்

டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாம்



- ✓ தலைசிறந்த இந்திய விஞ்ஞானிகளான ஆர்யபட்டா, இராமானுஜம், சர்.சி.வி.இராமன், விக்ரம் சாராபாய், ஹோமிபாபா மற்றும் அப்துல்கலாம் ஆகியோர்களின் அரிய படைப்புகளை இந்த அறிவியல் கிராமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்த நிகழ்ச்சியானது கிராமத்தின் சமுதாய மேம்பாடு மற்றும் கிராம மக்களை ஊக்குவிக்கவே சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இது அறிவியல் ஆர்வத்தையும் உலக அறிவையும் மாணவர்களிடையே இந்த இளம் வயதினிலேயே ஊக்குவிக்க மற்றும் உருவாக்க சிறந்த நல்லதொரு வாய்ப்பாகும்.





அறிவியல் உணர்வை தூண்டும் கீழ்கண்ட சிறப்பு செயல்முறை பயிற்சிகள் நடைபெற்றன.

- ❖ கடல் பாசியிலிருந்து பயோடீசல் தயாரிக்கும் முறை
- ❖ பிளாஸ்டிக் மாதிரிகளை முப்பரிமாண அச்சிடுதல்
- ❖ தூய்மை இந்தியாதிட்டம் கிராமங்களிலும் நடைமுறைபடுத்துதல்
- ❖ காந்த ஈர்ப்பு மூலம் எடை குறைத்தல் மற்றும் மெல்லிய உடல் அமைப்பு அடைய

விஞ்ஞான வரலாற்றில், சில இயற்கை நிகழ்வுகள் என்பது புதிய அறிவியல் தொடங்க துவக்க புள்ளியே....

சர்.சி.வி.இராமன்







## அடிப்படை ஆதார தொழில் முனைவோர்!!
## குறைந்த செலவில் எளிமையான கண்டுபிடிப்புகள்!!

- நமது முன்னோர்களின் இயல்பான அரிய கண்டுபிடிப்புகள் வெகுஜன மக்களிடையே சென்றடையவில்லை. அவைகளை மற்றும் தற்போதைய கண்டுபிடிப்புகளை வெளிக்கொணருவதற்கு தேசிய தொழில்முனைவர்களுக்கான நிறுவனம் இதற்கான வழிகாட்டுதல் மற்றும் ஆராய்ச்சிக்களுக்கான உதவிகளை செய்து வருகிறது.
- இந்நிறுவனம் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் துவக்கநிலை தொழில்முனைவர்களின் மேம்பட்ட தொழில்நுட்பம் ஆகியவற்றை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது.
- இந்த புதிய கண்டுபிடிப்புகளை சமுதாய மக்களிடையே சென்றடையவும், அவர்களின் தொழில் வளர்ச்சிக்கும் ஏதுவாக அமைந்துள்ளது.






தேவைகளே புதிய முயற்சிகளுக்கான ஆதாரமாகும். இந்த நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்களிலிருந்து 100 வகையான புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

அரிய வாய்ப்புகளை உருவாக்குவோம்.......

## நமது சமுதயாத்திற்காக
## மாபெரும் அறிவியல் தொழில்நுட்ப மற்றும் தொழில் கண்காட்சி

- இந்த சர்வதேச அறிவியல் திருவிழாவில் மாபெரும் அறிவியல் தொழில்நுட்ப மற்றும் தொழில் கண்காட்சியும் நடந்து வருகின்றன.
- இந்த கண்காட்சியில் தலைசிறந்த மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழிற்கூடங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், அரசு சார்பு மற்றும் தனியார் நிறுவங்கள் பங்கேற்று தங்கள் படைப்புகளையும் மற்றும் அனுபவங்களையும் மாணவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் எடுத்துரைத்தனர்.











தொகுப்பு: முனைவர்.இரா.வெங்கடேசன், க.திருமுருகன் , இரா.கனகராஜ் மற்றும் இரா.கி.முத்துமணி – என்.ஐ.ஓ.டி